பாசுரம் - 18

உந்து மத களிற்றன் ஓடாத தோள் வலியன் *
நந்த கோபாலன் மருமகளே நப்பின்னாய் *
கந்தம் கமழும் குழலீ கடை திறவாய் *
வந்து எங்கும் கோழி அழைத்தனகாண் / மாதவிப்
பந்தல் மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்*
பத்தார் விரலி உன் மைத்துனன் பேர் பாட *
செந்தாமரைக் கையால் சீரார் வளை ஒலிப்ப *
வந்து திறவாய் மகிழ்ந்து ஏலோ ஓர் எம் பாவாய்.

பதங்களின் பொருள்

18-1 **உந்து மத களிற்றன்** என்பதில் மத ஜலத்தை பெருக விடும் பெரிய யானை போலே பலம் உடையவன்

18-2 **ஓடாத தோள் வலியன்** என்பதில் யுத்த களத்தில் பயந்து பின் வாங்கி ஓடும் கோழை போல் அல்லாது நிறைந்த தோள் பலம் உடையவன்.

18-3 **நந்த கோபன் மருமகளே நப்பின்னாய்** நந்தகோபருடைய மருமகளே - நந்தகோபருடைய மாட்டுபெண்ணாக விளங்கும் நப்பின்னை பிராட்டியே.

18-4 **கந்தம் கமழும் குழலீ கடை திறவாய்** நல்ல வாசனை மிக்கதான கூந்தலை உடையவே, வாசலை சற்று திறப்பாயாக.

18-5 **கோழி வந்து எங்கும் அழைத்தனகாண்** கோழிகள் நான்கு பக்கங்களிலும் பரவி, கூவ ஆரம்பித்து விட்டதே

18-6 **மாதவிப் பந்தல் மேல் பல்கால் குயில் இனங்கள் கூவின காண்** குருக்கத்தி என்னும் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட பந்தல் மேல் குயில் போன்ற பறவைகள் இடைவிடாது சப்திக்க ஆரம்பித்தன.

18-7 **பந்து ஆர் விரலி உன் மைத்துனன் பேர் பாட** கிருஷ்ணனிடம் பந்து விளையாடி அவனை தோற்கடிக்கச் செய்வதற்கு காரணமான அழகான விரல்களை உடையவளே, உன் கணவனான கண்ணனை பல நாமங்களாலும் நாங்கள் பாடி மகிழ

18-8 **சீரார் வளை ஒலிப்ப வந்து** சீர்மை பொருந்திய சூடகம், வளை போன்றவைகளை அணிந்தவளே, அந்த வளைகள் குலுங்கி நல்ல ஓசையுடன் சப்திக்கும்படி நடந்து வந்து.

18-9 **செந்தாமரைக் கையால் மகிழ்ந்து திறவாய்** உன் தாமரை மலர் போன்ற கைகளால் சந்தோஷத்துடன் கதவைத் திறந்து எங்களுக்கு கண்ணனின் தரிசனத்தை தருவாயாக.

அவதாரிகை

18-10 **முன்னரிடம் முறை தவறியதால், உணர்ந்து பின்னையை எழுப்பினர்.**

அம்பரமே தண்ணீரே சோறே என்ற முந்தைய பாட்டில் நந்தகோபன், யசோதை, பலராமன் இவர்களை முன்னிட்டு கிருஷ்ணனை எழுப்பியும் அவன் எழுந்திருக்கவில்லை. ஒரு வேளை, அவனுடைய மனைவியான நப்பின்னை நமக்கு மிக முக்யம் என்பதாலே, கண்ணன் அவளை முதலில் எழுப்புங்கள் என்பது போல தூங்கிக் கிடக்கிறான் என நினைத்து நப்பின்னையை இந்த பாட்டில் எழுப்ப முயலுகிறார்கள்

18-11 **போகத்தை வேகத்தில் அடைய இவளுடைய பாதமே கதி.** போகத்தில் மயங்கி கண்ணனை எழுப்ப முனைந்தவர்கள், இப்போது தவறு செய்து விட்டோம். பிராட்டியே உன் மூலமாய் எம்பெருமானை அடைய வேண்டும் என்பதை மறந்தோம். ஆஸ்ரயணம் என்று நப்பின்னை பிராட்டியை பற்றினர்.

18-12 **நப்பின்னைக்கே ப்ராதான்யம் இங்கே கிருஷ்ணாவதாரத்திலே.** பெரிய பிராட்டியான மஹாலக்ஷ்மியே நமக்கு பரிந்துரை பேசி எம்பெருமான வசீகரிக்கும் புருஷகாரபூதை. ஆனால்

கிருஷ்ணாவதாரத்திலே நப்பினை பிராட்டிக்கே முக்யத்வம் என்பதாலே அவளை புருஷகாரமாக வேண்டினர்.

18-13 **நப்பின்னை நீளாதேவியின் அவதாரம்.**

பெரிய பிராட்டிக்கு சந்தனம், மாலை போன்றும், அவள் திருவடியாகவும் இருப்பதாலே இவளைப் பற்றி காரியம் கொள்ளுகை.

18-14 **கொள்ளை அடித்துச்சென்ற கோபிகைள் செல்வத்தில் பங்கு பெறவே வானுலகைத் தள்ளி கீழே வந்தவள்.**

மோக்ஷ ஸாம்ராஜ்யத்தில் ஸேஷி, ஸேஷாஜன, கருட ப்ரமுக, நாநாவிதாந்த பரிஜந பரிசாரிகா என்று எம்பெருமானுடன் ஆனந்தத்தில் இருப்பவர்கள் பார்த்தார்கள். அடே! இங்கே இல்லாத ஆநந்தம் ஒன்று இருக்கிறது. அது ஆயர்பாடியில் அவதரித்த கிருஷ்ணனிடம் ஒன்றும் அறியாத இடைப் பெண்கள் மோகித்து அவனுடன் சேர்ந்து அனுபவிக்கிறார்கள். அவர்கள் கொள்ளை அடித்துக் கொண்டு போய் விட்டார்கள். அந்த குறை தீர நம்மில் ஒருவராவது அங்கே போய் அந்த ஆநந்தத்தை அநுபவிக்க வேண்டும் என்பதற்கு நீளாதேவியானவள் நப்பின்னையாக அவதரித்தாள்.

இன்றோ திருவாடிப்பூரம் * எமக்காக
அன்றோ * இங்கு ஆண்டாள் அவதரித்தாள் * குன்றாத
வாழ்வான * வைகுந்த வான் போகம் தன்னை இகழ்ந்து *
ஆழ்வார் திருமகளாராய்

என்று பூமிப்பிராடியின் அவதாரம் ஆண்டாள் என்று வைகுந்தத்தை துறந்து இங்கே அவதரித்தாள் என்றார் மணவாள மாமுனிகள்.

18-15 **மூன்று, இரண்டு, ஒன்று என பலவானாலும், முகுந்தனை அடைய இவள் ஒருவளே.**

மோக்ஷத்தில் ஹ்ரீஸ்சதே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ என்கிறபடி மூன்று பிராட்டிமாரையும் பற்ற வேண்டும். பாற்கடலில் எம்பெருமானின் பாதங்களை வருடும் ஸ்ரீதேவி, பூதேவிகளை பற்ற வேணும். ராமவதாரத்தில் ஒரு சொல், ஒரு வில், ஒரு இல் எனக் கொண்ட

ராமனை அடைய ஸீதாபிராட்டி ஒருவளையே பற்ற வேணும். வராஹாவதாரத்தில் பூமி பிராட்டியையே பற்ற வேணும். இங்கே, கிருஷ்ணனான அவதரித்து, ஆயர்பாடியில் வளர்ந்த கண்ணனை, பிரதான மஹிஷியான நப்பின்னை மூலமாய் அடைய வேணும்.

18-16 **புருஷகாரத்திற்கு இவள் ஒருவளே போதும்.**
பெரிய பிராட்டி நமக்கு எல்லாம் புருஷகாரபூதை. அவளை புருஷகாரபூதை ஆக்குவதற்கு வேறு ஒரு புருஷகாரம் அவசியமில்லை. அதுபோலே நப்பின்னையும். இவள் ஒருத்தியைப் பற்றினால் போதும்.

18-17 **நப்பின்னையின் கருணையே கோபிகைகளுக்கு ஹேது.**
நப்பின்னையின் நிர்ஹேதுக (வேறு காரணம் எதுவும் வேண்டாத) நிரவதிக (அதைவிட மேல் ஒன்று இல்லாத) க்ருபையே (கருணையே) கோபிகைகளுக்கு தஞ்சம்.

18-18 **பிராட்டியின் பரிந்துரை அன்றி பலனில்லை. இது ராமாயணத்தில் பிரஸித்தம்.**
பிராட்டியை பரிந்துரைப்பவளாக பற்றினால் ஒழிய பலன் ஸித்திக்காது. இது ராமாயணம் போன்ற சரணாகதி சாஸ்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது

18-19 **பாகவத, பிராட்டி ஸம்பந்தத்தை காட்டியது** உம்பியும் நீயும் உறங்கேல், நப்பினை துயில் எழாய்.

நமோஸ்து ராமாய ஸ லக்ஷ்மணாய
தே3வ்யை ச தஸ்யை ஜநகாத்மஜாயை

ராமாயணத்தில் வரும் ஸ்லோகம் இது. லக்ஷ்மணனுடன் கூடிய ராமனுக்கு நமஸ்காரம். ஜநகனின் மகளான ஸீதைக்கு நமஸ்காரம்.

18-20 **பரம பாகவதனும் பிராட்டியை முன்னிட்டே பற்றினான்.**
ஸீதாம் உவாசாதி யஶா ராக$_4$வஞ்ச மஹாவ்ரதம்

ஸீதையையும், மஹா விரதம் பூண்ட ராமனையும் நோக்கி சிறந்த கீர்த்தி உடைய லக்ஷ்மணன் சொன்னான் என்றது ராமாயணம். அதாவது பிராட்டியை முன்னிட்டே லக்ஷ்மணன் பற்றினான் என்பதை.

18-21 **பிரித்தவர் படுதுயர் அடைந்தனர்.**

ராமனை மட்டும் தனியே அநுபவிக்க நினைத்த சூர்ப்பணகை மூக்கையும் காதையும் இழந்தாள். பிராட்டியிடம் முறை தவறிய ராவணன் மடிந்தான். தாடகை, வாலி, மாரீசன் போன்றோர் பிராட்டி ஸந்நதி இல்லாமையாலே உயிரை இழந்தனர்.

18-22 **சேர்த்தவர் செல்வந்தர் ஆனர்.**

மஹா அபராதம் செய்த காகாசுரனும் பிராட்டியை முன்னிட்டே எம்பெருமானிடம் சரண் புகுந்தான். ஸுக்ரீவனும் கழன்று விழுந்த ஸீதையின் திரு ஆபரணங்களைக் கொண்டே ராமனிடம் நட்பு கொண்டான்.

18-23 **பிரித்தால் க்லேசம். பிடித்தால் தேசம்.**

ஆழ்வார்களும் ஆசாரியர்களும் இஷ்ட ப்ராப்திக்கு இவளுடைய அருளே அவச்யமானது என்றனர்.

கடிவார் தீயவினைகள் நொடியாருமள வைக்கண்
கொடியா அடுபுள்ளுயர்த்த வடிவார் மாதவனாரே
நம்மாழ்வார், திருவாய்மொழி 1-7-10

சார்வு நமக்கு என்றும் ... தேன் அமரும் பூமேல் திரு
பேயாழ்வார், மூன்றாம் திருவந்தாதி

பிராட்டியை பிரித்து எம்பெருமானை மட்டும் தனியே அடைய முடியாது. அப்படி செய்தவர்கள் நாசம் அடைந்தனர். அதுவே பிராட்டி திருவடிகளை புருஷகாரகமாக பற்றினால் உயர்ந்த தேசமான, திட விசும்பு, நலம் அந்தமிலதோர் நாடு அதை அடையலாம்.

அந்யாபதேசம்

18-24 **சீரியரும் சிறியவரும் நந்தகோபாலா என விளித்தது நீர்மையாலே.**
அரசன், சான்றோர்கள் எல்லாம் நந்தகோபாலா என பெயர் சொல்லி அழைப்பது சரி. ஆனால் சிறு பெண்கள் கூட பேரைச் சொல்லி அழைக்கும்படியான நீர்மை உடையவன்

18-25 **கண்ணன் உகந்த முறையிலே அழைத்தனர்.**
நந்தகோபன் குமரன் என்று சொல்வதால் கண்ணனுக்கு உகப்பு. அதனால் இவர்களும் நந்தகோபனை முன்னிட்டே அழைத்தனர். முதலில் அவன் பெருமை சொல்லி, அவனுடைய பேர் சொல்லி, ஸம்பந்தம் சொல்லி, பின் நப்பின்னையை அழைத்தனர்.

18-26 **உந்து மத களிற்றன் எனில் பல யானைகளின் பலங்களை ஒருங்கே பெற்றவன்.**
மத ஜலம் பெருகி வலிமையுடன் விளங்கும் யானைகளை உந்தித் தள்ளும் பலம் பொருந்தியவன். ஏன் என்றால் இவன் பல யானைகளின் பலங்களை ஒருங்கே சேர்த்து பெற்றவன். அதனால் அநாயாஸமாக செய்கிறான். கம்ஸனும் அதனால் அருகில் இருந்தும் வராது போனான்.

18-27 **உந்து மத களிற்றன் எனில் பல யானைகளை உடையவன்**

மத்த கஜங்களை உடையவன் என்றும் சொல்லலாம். பசு மேய்க்கும் ஆயர் தலவர் இவருக்கு யானை ஏது என்றால், வசுதேவர் அளித்ததாக கொள்ளலாம்.

18-28 **ஸ்வதந்திரமான சுகுமாரனை உடையதால் மத களிற்றன்.**
யானை ஸ்வதந்திரத்துடன் காட்டில் திரியும். கண்ணனும் அப்படியே. மத மாதங்க காமிநம் என்று மதம் கொண்ட யானை போல் நடப்பவன் என்று பகவானை சொல்லி உள்ளதால், அந்த மத களிற்றை நியமிப்பவன் எனக் கொள்ளலாம்.

18-29 **பகவான் ஒரு யானை.**

பகவானை ஒரு யானையாகவே ஆழ்வார்கள் ஆசாரியர்கள் வர்ணித்தனர். நாலு திசைகளிலும் பரந்துள்ள யானை போலே

தென்னா னாய்! வடவா னாய்! குடபாலா னாய்
குணபால மதயா னாய்
திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி

18-30 **கஜத்தை போலே புஜ பலத்தை உடைய, ஓடாத தோள் வலியனுக்கு பல்லாண்டு**

பகவானுக்கு பல்லாண்டு பாடிய விஷ்ணுசித்தரின் திருமளாகையாலே இவளும் பிராட்டியும் பகவானும் சேர்ந்த மிதுனத்திற்கு தீங்கு நேராது காக்கும் நந்தகோபனுடைய தோள் வலிமைக்கு பல்லாண்டு பாடுகிறாள்.

18-31 **புஜத்தின் கீழே ஜகம் அனைத்தும் அடக்கிய அவனுக்கு தந்தை இவன்.**

எந்த மஹாபுருஷனுடைய தோள்களின் நிழலுக்கு கீழே உலகம் எல்லாம் ஒதுங்கி இருக்கின்றனவோ என்றது வேதமும். அப்படிப்பட்ட கண்ணனின் தந்தை இவர் அல்லவோ.

ப$_3$ாஹீச்ச$_2$ாயா மவஷ்டப்$_3$தோ யஸ்ய லோகோ மஹாத்மந:

18-32 **மகன் தந்தைக்கு அளித்த செல்வத்தாலே ஓடாத தோள்வலியன்**

கண்ணன் மிகவும் நல்ல குழந்தை. தான் சம்பாதித்த எல்லாவற்றையும் அப்பாவிடம் தருகிறான். குவலயாபீடம் என்ற மதம் பிடித்த யானையை அழித்து அதன் பலத்தை அப்பாவான நந்தகோபனுக்கு கொடுத்தான். மேலும், பல மல்லர்களை கொன்றபோது அவர்கள் தோள் வலிமை எல்லாம் எடுத்து தகப்பனுக்கு அளித்தான்.

18-33 **மாமனார் அளித்த செல்வத்தாலே காமுற்று கண்ணனை தனியே அணைத்துள்ளாய்**

அந்த நந்தகோபன் தன் வலிமை எல்லாம் நன்றியுடன் உனக்கு தந்து இருக்கிறான். நீயும் கண்ணனும் சுகமாய் படுத்து உறங்கிக்

கொண்டு இருக்கிறீர்கள். கண்ணனை வெளியே போகாதவாறு, நீ அவனை அமுக்கி அணைத்து கிடக்கிறாய். நீ வைகுண்டத்திலிருந்து வந்தவள் ஆயிற்றே, உனக்கு இல்லாத சக்தியா? என்றனர்.

18-34 **மருமகள் என்பதில்தான் பெருமை இவளுக்கு.**

நந்தகோபாலன் மருமகளே தந்தையான கும்பரைக் காட்டிலும் மாமனாராகிய நந்தகோபனிடத்தில் ப்ரீதி அதிகம். ஸீதையும் அப்படியே. முதலில் தசரதனைச் சொல்லியே பின் ஜநகரின் மகள் என்றாள்.

ஸ்நுஷா த3ஶரதஸ்யாஹம் சத்ரு சைன்யாம்

18-35 **நம்பெருமாள், நம்மாழ்வார், நஞ்சீயர், நம்பிள்ளை போலே இவளும் நப்பின்னை**

இவள் பேர் பின்னை. ந என்பது உய்ர்த்தியை காட்டும். நம்பெருமாள், நஞ்சீயர் போல.

18-36 **நந்தகோபனுக்கு மருமகள் அல்லாதாரும் உளரோ என்பதை தெளிவிக்க நப்பின்னாய் என்று அழைத்தனர்**

நந்தகோபாலன் மருமகளே என அழைத்தபின்னும் இவள் எழுந்திருக்கவில்லை. ஆயர்பாடியில் கண்ணன் வந்து அவதரித்ததும், எந்த பெண்தான் நந்தகோபனுக்கு மருமகள் இல்லை? அதனால் குழப்பம் நீங்க, நப்பின்னாய் என பெயரிட்டு அழைத்தனர்.

18-37 **வேஷம் போடும் பெண்ணே என ரோஷம் கொண்டு நப்பின்னாய் என உரக்க பெயரிட்டு அழைத்தனர்.**

இவ்வளவு சொல்லியும் எழுந்திருக்காதால் ரோஷம் கொண்டு நப்பின்னாய் என பெயரை அழுத்தி கூப்பிட்டனர். ஹே கிருஷ்ணா, ஹே துவாரகாவாஸீந் என்று த்ரௌபதி அழைதாற்போலே துன்பம் தாங்காமல் உரக்க அழைத்தனர்.

18-38 **நாமம் முன்னே அங்கு. நறுமணம் முன்னே இங்கு.**
கந்தம் கமழும் குழலீ - இத்தனை அழைத்தும் நப்பின்னை செவி சாய்க்க வில்லை. இவர்கள் சிறிது நேரம் கத்திவிட்டு நான் உள்ளே இல்லை என போய்விடுவார்கள் என்று நினைக்காதே. நீ உள்ளே இருப்பது எங்களுக்கு தெரியாதா? உன்னுடைய நறுமணம் கொண்ட கூந்தல் உன்னை காட்டிக் கொடுக்கிறதே. அதை அனுமனின் தந்தை எங்குளுக்கு அறிவித்துள்ளார்.

த்ரௌபதி அழைத்த போது பகவானுக்கு முன்னே அவன் நாமம் வந்து உதவியது போலே உன் நறுமணம் உன்னக் காட்டிக் கொடுத்து பகவானிடம் எங்களை சேர்பிக்க வேண்டும்.

18-39 **அபிமத அநுரூபமான கந்தம் கமழும் குழலி** -
ஸர்வ ரஸ: ஸர்வ கந்த: என்று விளங்கும் எம்பெருமானுக்கு ஒத்தவள் நீ அல்லவா? அதனால்தான் உனக்கும் இந்த உயர்ந்த வாசனை.

18-40 **திருவுக்கும் திருவாகியதால் பரிமளத்திற்கு நறுமணம் அளிப்பது நீ.**
கந்தம் கமழும் குழலி - திருவுக்கும் திருவாகிய செல்வன் அவன். அதுபோலே வாசனைக்கு வாசனை அளிப்பது உன் கூந்தல் அன்றோ!

18-41 **மலரிட்டு நாம் முடியோம் என்று இருக்க நீ மட்டும் கந்தம் கமழும் குழலியோ?**
கிருஷ்ணனை அடைய வேண்டும் என்று நாங்கள் மலர், வாஸனை இவர்றை எல்லாம் துறந்திருக்கிறோம். நீ மட்டும் வாஸனையுடன் இருப்பதா என்று ஏளனமாக சொல்வதாக நினைத்து படுத்துக் கிடக்கிறாயோ?

18-42 **கண்ணனின் திருவடித்தாமரையை தலையில் யாமும் தரிக்க கடை திறவாய்**
வாசலை திறக்கமாட்டாயா? நாங்களும் பூ போன்ற கண்ணனின் திருவடிகளை எம் தலையில் அணிந்து வாஸனையுடன் இருப்போமே.

18-43 **பகவத் விஷயம் அந்தரங்கம் அன்றே எனில் கடை திறவாய்**
பகவத் விஷயம் அந்தரங்கமாக அநுபவிப்பதில்லையே! எல்லோரும் கூடி இருந்து அநுபவிக்க வாசலை திறக்க மாட்டாயா?

18-44 **அடியார் குழாங்களை உடன் கூடுவது என்று கொலோ எனில் கடை திறவாய்.**
இருப்பதை விட்டு நீ மட்டும் கண்ணனுடன் இருப்பது சரியில்லை. வாசலைத் திறவாய்.

18-45 **சிறு துளி பெரு வெள்ளம் போலே கடை திறவாய்**
சரி, தாழ்ப்பாளை விலக்கி, கதவை முழுவதும் திறக்க வேண்டாம். ஏதோ சின்னதாக ஒரு பக்கம் திறந்தால் கூட போதும். அந்த கண்ணனின் தரிசனம் பெரு வெள்ளம் போலே எங்களுக்கு கிடைத்து விடும்

18-46 **இரவின் பிரிவுக்கு அடையாளம் பல கோழிகள் கூவுதல்.**
நடு இரவில் வந்து கதவை திற என்று கேட்கிறீரே என நினைக்காதே! டூரவு முடிந்து, கோழிகள் கூவும் விடியற்காலை பொழுது வந்து விட்டது. ஒரு கோழி கூவுவது அடையாளம் இல்லை என்று சாக்கு சொல்லாதே. ஒரு கோழி மட்டும் இல்லை, எல்லா கோழிகளும் சேர்ந்து கூவுகின்றன.

18-47 **பிரிவின் துக்கத்தை கோழிகள் கூவி உணர்த்தின.**
கோழி கூவுவது கிருஷ்ணனுடைய பிரிவை எங்களுக்கு ஞாபகம் படுத்துகிறது. இரவு பூராகவும் இப்படியே கண்ணன் இல்லாமல் கழிந்து விட்டதே என நாங்கள் துக்கிக்கிறோம். நீ அவனுடன் எப்போதும் சேர்ந்து இருப்பதால் உனக்கு அது தெரியவில்லை போலும்!.

18-48 **விடாது கூவும் குயில் கூட்டங்கள் கோழிகளை ஆமோதித்தன. -**
மாதவிப் பந்தல் மேல் குயில் இனங்கள் பல்கால் கூவின காண்

சாமக் கோழிகள் என்பவை ஒவ்வொரு சாமத்துக்கும் கூவி அழைத்து அடங்கி விடும். அவை உள்ளே இருந்தே கத்தும். இது சாமக் கோழிகள் இல்லை. இன்னும் பொழுது விடியவில்லை என நினைக்காதே. விடியற்காலை வந்து விட்டது. உனக்கு இன்னும் சந்தேகம் என்றால் குயில் இனங்கள் பல தடவை இடைவிடாமல் கூவுகின்றனவே அது கேட்கவில்லையா?

18-49 **இது ஒன்றல்ல. ஒரு முறை அல்ல.**
மாதவிப் பந்தல் மேல் குயில் இனங்கள் பல்கால் கூவின காண் அம்மா, அது ஒரு குயில் இல்லை. பல கூட்டங்கள். ஒரு தடவை இல்லை. பலதடவை அவை கூவுகின்றன. கூவிக் கொண்டே இருக்கின்றன.

18-50 **கர்மமே களிப்பு என அவை உறக்கத்தை துறந்திருக்க நீ மட்டும் துயில்வது ஏன்?**
மாதவிப் பந்தல் மேல் குயில் இனங்கள் கூவின காண் அந்த குயில்கள் எங்கே தூங்குகின்றன. மிக விருப்பமான குருக்கத்தி படுக்கையில் உறங்கி கிடக்கின்றன. சுகமான உறக்கத்தை விட்டு காலா காலத்தில் செய்ய வேண்டிய காரியம் இது என கூவி இருக்க, நீ மட்டும் உறங்குவது ஏன்?

18-51 **அச்சத்தினால் வரும் அலறல் இல்லை இது. கர்மாவைக் கண்டு உறக்கத்தை துச்சமாக தள்ளுவதால்.**
மாதவிப் பந்தல் மேல் குயில் இனங்கள் கூவின காண் நப்பின்னை நினைத்தாள். இந்த பெண்கள் எல்லாம் குயில்களை பயமுறுத்தி அவைகளை கூவச் செய்து இருக்கலாம். அது காலை உதயத்திற்கு அடையாளம் இல்லை என படுத்திருந்தாள்.

18-52 **வெற்றிக்கு பரிசு கையில் பந்து**
பந்தார் விரலி நப்பின்னை பந்தயத்தில் ஜயித்ததால் பந்தை தனக்கு உரிமையாக்கிக் கொண்டாள். (cricket match இல் ஜயித்தவன் stump ஐ பிடுங்கி எடுத்து போவது போலே)

18-53 **உடமை ஒரு பக்கம். உரிமை ஒரு பக்கம்.**
பந்தார் விரலி பந்தை ஒரு கையாலும், கிருஷ்ணனை ஒரு கையாலும் அணைத்து மகிழ்ச்சியுடன் இருக்கும் உனக்கு கர்வம் அதிகம். போகோபகரணம் ஒரு பக்கம். ஸ்ரீலோபகரணம் இன்னொரு பக்கம்.

18-54 **அவனைப் பற்றி இவள் இருக்க இவளைப் பற்றி மற்றவர் கிடக்க.**
பந்தார் விரலி ஸ்ரயதே இதி ஸ்ரீ, ஸ்ரியதே இதி ஸ்ரீ என்ற வித்பத்திகளால் ஸர்வ சராசரமும் இவளை அடைந்தன. இவள் எம்பெருமானை அடைந்திருந்தாள். ஒரு பக்கம் பந்தும் ஒரு பக்கம் கண்ணனும். இவளை அடைந்த்தால் கவலையின்றி சேதன்ர்கள் எல்லொரும் கிடந்தனர்.

18-55 **பந்தின் பாக்யம்தான் என்னே!**
பந்தார் விரலி உன் கையில் இருக்கும் பந்துதான் என்ன பாக்யம் செய்ததுவோ. நாங்கள் பந்தாக இருந்து அந்த இன்பத்தை அநுபவிக்கக் கூடாதா? என வருந்தினர்.

18-56 **ஓடாத தோள்வலியன் மகன் தோல்வியுற்று ஒரு பாவையின் அணைப்பில் ஓடாது கிடந்தான்.**
பந்தார் விரலி பந்தாட்டத்தில் இவள் வெற்றி பெற்றாள். கண்ணன் தோல்வி அடைந்து ஓடப் பார்த்தான். ஓடாதே கண்ணா! என்று அவனை அணைத்து பிடித்து, விளையாட்டு இன்னமும் முடியவில்லை என்ற பாவனையில் படுத்து கிடந்தாள்.

18-57 **உனக்கு உறுதுணையாக இருக்கவே யாம் வந்தோம்.**
மைத்துனன் பேர் பாட கடைசியாக நப்பின்னை இவர்களுக்கு செவி சாய்த்து, நீங்கள் வந்த காரியம் என்ன என வினவுகிறாள். கண்ணனுடன் விளையாடுவதில் நீ எங்கேயாவது தோற்றுப் போனால், உனக்கு ஆறுதல் சொல்லி அருகில் இருக்க வந்தோம்.

18-58 **உன் மைத்துனன் பேர் பாட யாம் வந்தோம்**
ஸ்ரீமந் நாராயணா, திரு நாராயணா, செல்வ நாராயணா என்கிறாற்போலே

18-59 **மாசுச: என்றவன் இருக்க மலர்மகள் வடிவான உன்னையே நாடினோம்.**
செந்தாமரைக் கையால் மாசுச: என்றான் கண்ணன். அவன் திருக்கரங்கள் வேண்டாம். அதை நாங்கள் எதிர் பார்க்கவில்லை. உன்னையே வேண்டி வந்தோம். அன்பர்க்கே அவதரிக்க ஆயன் நிற்க அருமறை தமிழ் செய்தான் தாளே கொண்டு என்கிறாற்போல்

18-60 **பந்தை பிடித்த கை சிவந்தாலும் பாவத்தை கண்டு மனம் சினக்காது.**
செந்தாமரைக் கையால் பந்தை பிடித்து விளையாடியதால் இவளுடைய கை சிவந்தது. அநுக்3ரஹமயீம் வந்தே3 நித்யம் அஜ்ஞாத நிக்3ரஹாம் என்பதாலே இவள் மனம் என்றும் குளிர்ந்தது.

18-61 **பிரிவு இல்லை எனில் மெலிவு இல்லை. மெலிவு இல்லை எனில் வளை நழுவல் இல்லை.**
சீரார் வளை ஒலிப்ப கண்ணனை விட்டு பிரிந்தால்தானே துக்கம், கண்ணீர் உடல் மெலியும் தன்மை எல்லாம். நீயோ அவனை விட்டு பிரிவதே இல்லை. உடல் எல்லாம் நன்றக் சுகத்தில் மூழ்கி பெருது கிடக்கிறது. அதனால் கையை விட்டு நழுவாத வளை.

18-62 **உத்தம ஸ்திரி லக்ஷணம் வளை ஒலி.**
சீரார் வளை ஒலிப்ப வளை ஒலி என்பது உத்தம ஸ்திரீகளின் லக்ஷணம் ஆடை ஆபரணங்களுடன், புன்னகையுடன், வ்ரவேற்புடன் எப்போதும் சிரித்து இருப்பது. ஆகையாலே உன்னைக் கண்டு, அந்த திருமுகத்தை பார்த்து, வளை ஒலியை கேட்டு, அநுபவிக்க வேண்டும் என்ற ஆசையுடன் கேட்டனர்.

18-63 **ஒண்தொடியாள் என ஆழ்வார் அனுபவித்த சீரார் வளை ஒலிப்ப** ஒண்தொடியாள் திருமகள் என்று ஆழ்வாரும் வளையை உயர்த்தி சொன்னாரே. தேசிகனும் ஒண்தொடியாள் திருமகளும் தானும் ஆகி என்று பிராட்டியின் ல்க்ஷணத்தையே காட்டினார்.

18-64 **எம்மை ஒரு பொருளாக்கி வந்து திறவாய்** நாலு அடி எடுத்து வைத்து எங்களுக்கு ஒரு மரியாதை கொடுத்து அழகாக நடந்து வந்து கதவவைத் திறக்க வேணும். கண்ணனிடத்தில் எம்மைக் காட்டி, சிறு பெண்கள் வந்திருக்கிறார்கள் அவர்களுடைய விண்ணப்த்தைக் கேட்டு அருள் செய்து, அவர்கள் ஆசையை பூர்த்தி செய்வ வேண்டும் என்று கண்ணைடம் சிபாரிசு செய்ய வேண்டி கதவை திறப்பாய் என வேண்டினர்.

18-65 **நடையழகை கண்டு நாங்களும் மயங்க வந்து திறவாய்** நாங்களும் உன் நடை அழகை ரசிக்க ஆசைப்படுகிறோம். மெல்ல வந்து கதவைத் திறவாய் என்றாள்.

18-66 **திறப்பதில் மகிழ்ச்சி எனக்கே என மகிழ்ந்து திறவாய்** ஏதோ கஷ்டப்படுவர்களுக்கு உதவினோம் என்று நினைத்து வராதே. நீயே மகிழ்ந்து வந்து திறாவாய்.

அபி$_4$ஷிச்சய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்$_3$ரம் விபீ$_4$ஷணம் |
க்ருத க்ருத்யஸ் தத$_3$ா ராமோ விஜ்வர: ப்ரமுமோத$_3$ ஹ ||
விபீஷணனுக்கு பட்டாபிஷேகம் ராமன் செய்கிறான். செய்து கொள்ளும் விபீஷணன் முகத்தில் ஒரு மாறுதலும் இல்லை. ஆனால் செய்து வைத்த ராமனோ செய்ய வேண்டிய காரியங்கள் எல்லாம் செய்து முடித்தாற்போல் ஆநந்தம் அடைந்தான்.

18-67 **ஐம்புலன்களாலும் அநுபவம் எங்கும் பரவ வந்து திறவாய்** - வந்து உன்னை பார்ப்பதால் கண்களின் அநுபவம். வளை ஒலிப்ப - உன் வளை ஒலி கேட்பதால் காதின்அநுபவம். பேர் பாட - உன்னையும், உன் கணவனையும் சேர்த்து பாடுவதால் நாக்கின்

அனுபவம். **செந்தாமரைக் கையால்** - உன் அழகான திருக்கை கதவின் மேல் பட்டு திறப்பதே ஸ்பர்ச இந்திரியத்தின் அனுபவம். **கந்தம் கமழும் குழலி** - உன் கூந்தலின் பரிமளம் மூக்கின் அனுபவம். **மகிழ்ந்து** - இப்படி எல்லா இந்திரியங்களும் அனுபவத்தில் மூழ்கி கிடக்க உன் மனது குளிர்வதைக் கண்டு எங்கள் உள்ளமும் உகக்க வேண்டும்.

ஸ்வாபதேசம்

18-68 **ஸ்மிருதி, பாரத, கீதா, புராணங்கள், எம்பெருமானார் முயற்சி போலே பதினெட்டின் புகழ்ச்சி இங்கே.**

இது 18ம் பாசுரம். 18 என்பதே உயர்ந்ததாய் இருக்கக்கூடிய எண். மஹாபாரதம் 18 அத்யாயங்கள். 18 புராணங்கள். 18 ஸ்மிருதிகள், பாகவதம் 18 ஆயிரம் ஸ்லோகங்கள். கீதையில் 18ம் அத்யாயம் முக்யம். எம்பெருமானார் 18 தடவை திருக்கோஷ்டியூர் நம்பியிடம் ரஹஸ்யார்த்தங்களைப் பெற நடந்து சென்றார். இப்படி 18க்கு பெருமை பல.

18-69 **இது எம்பெருமானார் உகந்த பாசுரம்.**

இந்த பாசுரத்தை எம்பெருமானார் மிகவும் உகந்திருப்பார் என முன்னோர்கள் கூறுகின்றனர். அவர் திருப்பாவையை அனுபவித்துக் கொண்டே பிக்ஷைக்கு செல்லும்போது, ஒரு நாள் திருக்கோஷ்டியூர் நம்பி இல்லத்தின் முன் **உந்து மதகளிற்றன்** அநுஸந்திக்க, நம்பியின் திருமகளான் தேவகி கதவை திறக்க, எம்பெருமானாரும், கிருஷ்ணனை பெற்ற தேவகியே வந்து கதவவை திறந்தாள் என விழுந்து ஸேவித்தார். இதை புரிந்து கொண்ட நம்பியும், **"என்ன இளையாழ்வாரே, உந்து மதகளிற்றன் அநுஸந்தானமோ"** என வினவினார்.

மாதுகரத்துக்கு எழுந்ததருளி வரும் போதன்றிப் போம்போதும்
ஓதும் கோதை திருப்பாவை உரையோடு உலாவித் திரிபவரும்
வேதம் வல்ல திருக்கோட்டி நம்பி மனையில் மெய்ஞ்ஞானப்
போதமுடையார் ஆங்கு ஒரு நாள் புக்கார் உந்து மதகளிற்றில்

மாதுகரம் - உஞ்சவ்ருத்தி, போதம் - அறிவு

18-70 **த்வயத்தைப்போல் திருப்பாவையும் அர்த்தாநுஸந்தானம் செய்யக்கடவது.**
"த்3வயம் அர்த2ாநுஸந்த4ாநேந ஸஹ ஸதை3வம் வக்தா" என்கிறாற்போல் இங்கே திருப்பாவையும், உரையோடு, அதாவது அர்த்ததுடன் அநுஸந்தானம் செய்ய வேண்டி என்றது.

18-71 **பாகவத, ஆசாரிய பிராட்டி ஸம்பந்தமே பகவதநுபவத்திற்கு அடிக்கல்** (Foundation) பகவத் அநுபவத்திற்கு பாகவத ஆசாரியர்களை கீழே காட்டியபின், இங்கே பிராட்டியை காட்டியது. அம்பரமே தண்ணீரே என்ற கீழ் பாசுரத்தில் எம்பெருமானை அநுவிக்க பாகவத ஆசார்ய அநுக்ரஹத்துடன் செய்ய வேண்டும் என்று காட்டியது. இங்கே பிராட்டி புருஷகாரகத்தை விளம்பியது.

18-72 **உகாரார்த்தமான பிராட்டியை சொல்லுவது உந்து மதகளிற்றன்.** இங்கே உந்து மதகளிற்றன் பாசுரத்தில் உகாரத்தில் ஆரம்பித்து, பிராட்டியை புருஷகாரமாக முன்னிட்ட வழியை காட்டுகிறது.

18-73 **பிராட்டி வைபவம் உந்து, குத்து, முப்பத்தில் பேசினாலும், புருஷகாரக பெருமை தனித்து இங்கே.**
மூன்றிலும் பிராட்டி வைபவம். ஆனால் இங்கே பிராட்டி மட்டுமே சொல்வதால் புருஷகாரத்தை காட்டுகிறது என்றனர் முன்னோர்.

18-74 **புருஷோத்தமனாகிய எம்பெருனானின் புருஷ லக்ஷணத்தை சொல்லியது உந்து மத களிற்றன், ஓடாத தோள்வலியன்.**
ஆயர்கள் தலைவன் கண்ணன். அவன் லக்ஷணத்தை காட்டியது.

18-75 **நப்பின்னை என்பவள் மஹாலச்ஷ்மியின் அவதாரம் இங்கே.**
நப்பின்னை நங்காய் திருவே துயில் எழாய் என்று முப்பது மூவர் பாசுரத்தில் சொன்னது. ஸ்வாமி தேசிகனும் பெரிய பிராட்டியின் அவதாரமே என்று பரமபத ஸோபானத்தில் ஸாதித்தார்.

18-76 **நப்பின்னை என்றால் நல்ல பின்னை – நன்கு ராமனைப் பின் தொடர்ந்த ஸீதையைச் சொல்லும்.**
நப்பின்னை என்பது ஸீதையையே சொல்லும்.

18-77 **நந்தனும் கோபனுமாகிய எம்பெருமானின் திருமார்பில் மறுவாய் விளங்குபவள் மருமகள்.**
ஆநந்தத்தை கொடுத்து நம்மை ரக்ஷிப்பாதால் எம்பெருமானே நந்தகோபன். அவன் திருமார்பில் உள்ள மறு போல அகலகில்லேன் என்று இருப்பவள் மறு மகள்.

18-78 **கோழி பாகவத லக்ஷணத்தை காட்டும்.**
வந்து எங்கும் கோழி அழைப்பதன காண் - அடியவர்களின் அடையாளம். எம்பெருமானார் 18 தடவை ரஹஸ்யார்த்தங்களை கிரஹிக்க வேண்டும் என்று திருக்கோக்ஷ்டியூர் நம்பியை அணுகினார். கோழி தனக்கு வேண்டிய பொருளைக் கிளறி அலையும். பாகவதனும் அப்படியே.

18-79 **கொக்கைப்போலே, கோழிபோலே, உப்பைப்போலே, உன்னைப்போலே பாகவதன் இருப்பான்.**
வந்து எங்கும் கோழி அழைப்பன காண் கொக்குபோல் இருக்கும் - சிறிய மீனை விட்டு பெரிய மீனைத் தேடும். அது போல பாகவதனும் அல்ப அஸ்திர விஷயங்களை விட்டு பகவத் அநுபவத்தை தேடுவான். கோழி போல் இருக்கும். - கோழி குப்பையை கிளறி தனக்கு வேண்டியதை பொறுக்கும். அது போல பாகவதனும் வேதங்களை கிளறி உயர்ந்த ப்ரம்ம தத்துவத்தை பொறுக்கி எடுப்பான். உப்பு போல் இருக்கும் - உப்பு அது சேர்ந்த பண்டங்களில் எல்லாம் தன் ருசியைத் தரும். அது போல பாகவதன் எல்லோரிடத்திலும் சேர்ந்து தன்னுடைய பகவத் அநுபவத்தை எல்லோரும் பெற வேண்டும் என தருகிறான். உம்மைப்போல் இருக்கும் - எம்பெருனாரைப் போல் இருக்க வேண்டும். ஞானத்தை பெற்றால் ஒழிய உயிர் தரிக்க முடியாது என்று இருக்க வேண்டும்.

18-80 **வையாகரணர்கள் கோழி சப்தத்தையே திருஷ்டாந்தரமாகக் கொண்டார்கள்.**

ஸமிஸ்கிருத்தில் வியாகரண பண்டிதர்கள், அதாவது இலக்கண உரையாளர்கள் ஹ்ரஸ்னம், தீர்க்கம், ப்லுதம் என்ற அக்ஷரத்திற்கு சப்தம் சொல்ல கோழியையே உதாரணமாக காட்டினர்கள். (ஊ 1, ஊ2, ஊ3)

18-81 **கோழி திருமணத்திற்காக அழைத்தன. கூவவில்லை.**

கோழி கத்தின, கூவின, ஒசை செய்தன என்று சொல்லாமல் அழைத்தன என்றாள் ஆண்டாள். எம்பெருமானுக்கும் சேதனனுக்கும் செய்விக்கிற ப்ரப்த்தி என்னும் திருமணம் விடியற்காலை பொழுதில் நடக்கவிருக்கிறது அதற்கு எல்லா பாகவத்ர்களுக் கூடி ஆசிர்வதிக்க வேண்டும் என்கிறார்போல்.

18-82 **வேத ஸிரஸாகிற உபனிஷத்துக்களே மாதவிப் பந்தல்**

பந்தல் என்பதால் உயர்ந்த ப்ரமாணமாகிற வேதத்தின் ஸிரஸ் என சொல்லப்படும் உபநிஷத்துகள்.

18-83 **அதன் மேல் ஆசார்ய உபதேசமே பல்கால் குயிலினங்கள் கூவுதல்**

ஆசாரியர்கள் அந்த உபநிஷத்தில் யோகம் செய்து, நன்கு அறிந்து செய்யும் உபதேசங்கள். அவற்றினால் ஞானம் விகாஸமைடைய வேண்டும்

18-84 **ஒரு பக்கம் சொத்து. ஒரு பக்கம் வித்து என்று நப்பின்னை கிடந்தாள்.**

ஒரு பக்கம் பந்தையும், மற்றொரு பக்கம் கண்ணனையும் அணைத்து படுத்து கிடக்கிறாள். சொத்தையும், அதனை உடையவனையும். விபூதியையும், விபூதிமானையும், நார சப்தத்தையும், நர சப்தத்தையும். லீலோபகரணத்தையும், போகோபகரணத்தையும். பந்து என்பது சேதநா சேதனங்களுக்கு ஒரு உபலக்ஷணம்.

18-85 **வேரி மாறாத பூமேல் இருப்பவள் வினை தீர்க்க பந்தார் விரலி.**
பிராட்டியை புருஷகாரகம் என்று அடைந்த நம் பாபங்களை ஒழித்து எம்பெருமானின் கருணைக்கு பாத்திரமாக்குகிறாள்.

18-86 **ஸர்வ பாபேப்யோ, மாசுச: என்ற கண்ணனின் ஸ்வாதந்திர்யத்தைக் கண்டு அகலாமைக்கு இவளை பற்றுகை.**
பந்தார் விரலி எம்பெருமான் ஸர்வ பாபேப்யோ, மாசுச என்று அஞ்சாதே என்று அபய முதத்திரை காட்டினான். ஆனாலும் அவன் ஸ்வதந்திரன். பிராட்டியோ நான் இருக்கிறேன். பகவான் ஸ்வாதந்திர்யத்தை கண்டு அகலாதே என்றாள்.

18-87 **நப்பின்னை கோஷ்டி ஸீதையின் கோஷ்டி போலே**
பந்தார் விரலி பராசர பட்டரும் நாம் எல்லோரும் பிராட்டி கட்சி. ஸீதா தேவியின் கோஷ்டி எம்பெருமான் ராமபிரான் கோஷ்டியை விட உயர்ந்தது போலே என்றார்.

18-88 **கேட்ட பின்னேரே அவனருள். கேட்பதற்கு முன்னமே இவளருள்.**
பந்தார் விரலி பகவான் சரண் என்று அடைந்தவரைதான் காக்கிறான். விபிஷணன், சுக்ரீவன் போன்றவர்கள். பிராட்டியோ தன் கருணையால் தனக்கு இன்னல்கள் இழைக்கும் ராக்ஷஸீகளை காத்தாற்போல், நாம் கேட்கும் முன்னே காத்து அருள்கிறாள்.

18-89 அஸ்து தே தயைவ ஸர்வம் ஸம்பத்ஸ்யதே **என்பதே சீரார் வளை ஒலி.**
பிராட்டியின் வளை ஒலி என்பது நாம் செய்யும் புருஷகார ஶரணாகத்திக்கு மகிழ்ந்து அநுக்ரஹம் செய்து, அப்படியே ஆகட்டும். எல்லா செல்வங்களும் உமக்கு கிடைக்கட்டும் என்று செய்யும் ஆசிர்வாதம்.

18-90 பவேயம் ஶரணம் ஹி வ **என்பதே சீரார் வளை ஒலி.**
நப்பின்னையின் வளை ஒலி என்பது ஸீதை செய்த அநுக்ரஹம் போலே.

18-91 **முக்தனின் ப்ரவேசத்தால் வரும் ஆநந்தம் முகுந்தனுக்கே முக்யம். எனவே மகிழ்ந்து திறவாய்.**

மோக்ஷானந்தத்திற்கு முக்தன் செல்லும்போது யாருக்கு அதிகமான மகிழ்ச்சி என்றால் கிட்டாத பேறு கிட்டிய முக்தனுக்கு அல்ல. தவறிய குழந்தையை திரும்பி அடைந்து பகவானுக்குத்தான். நப்பின்னையே நீ உள்ளே மகிழ்திருக்கிறாய். உனக்கு எப்போதும் ஆநந்தம்தான். ஆனால் சேதனர்களாகிற எங்களை சேர்த்து கொள்வதில்தான் உனக்கு அதிகமான ஆநந்தம்.

18-92 **ப்ரம்மாநந்தத்தை அநுபவிக்க, செந்தாமரைக் கையால், சும்மா வந்து திறப்பாயோ**

உன் தாமரை மலர் போன்ற கைகளால் சந்தோஷத்துடன் திறப்பாயாக. எங்கள் மனக் கதவைத் திறந்து எம்பெருமானையே ஆநந்திக்க. உலக விஷயங்களில் பற்று நீங்கி, அழியாத, குறையாத, இணையில்லாத ப்ரம்மானந்த்தில் எங்கள் மனது செல்ல வேண்டும் என வேண்டினர். உன் செந்தாமரைக் கை கருணை வாத்ஸல்யத்தை காட்டுகிறது. சும்மா என்பதால் ஞானம், சக்தி இல்லாத, காலவிளம்பம் பொறுக்காத எமக்கு சரணாகதி என்ற ஒன்றையே சாக்காக கொண்டு கதவை திறப்பாய் என வேண்டினர்.

18-93 **மூன்று பிராட்டி ஸம்பந்தத்தால் மூன்று சரம ஸ்லோகம்**

பூமி பிராட்டி வராக அவதாரத்திலும், ஸீதை ராமவதாரத்திலும், நப்பின்னை கிருஷ்ணாவதாரத்திலும் பிராட்டி ஸம்பந்த்தைக் கொண்டதால் எம்பெருமான் மூன்று சரம ஸ்லோகங்கள் அருளினான்.